

# தமிழ் நான்மறை விளக்கம்

தமிழண்ணல்

மீனாட்சி புத்தக நிலையம்

# தமிழ் நான்மறை விளக்கம்

தமிழண்ணல்

மீனாட்சி புத்தக நிலையம்
48, மயூரா வளாகம், தானப்ப முதலி தெரு,
மதுரை - 625 001.

முதற் பதிப்பு : திருவள்ளுவர் ஆண்டு 2046, ஆடி (12.8.2015)
**விலை.ரூ.20/-**


<u>நூல் விவரப்பட்டியல்</u>

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | தமிழ்நான்மறை விளக்கம் |
| ஆசிரியர் | : | தமிழண்ணல் |
| நூலின் தன்மை | : | சமய விளக்கம் |
| விலை | : | ரூ. **20.00** |
| பக்கங்கள் | : | 24 |
| எழுத்து | : | 11 புள்ளிகள் |
| நூல் அளவு | : | 14 X 22 செ.மீ. டெம்மி |
| பைண்டிங் | : | அட்டைக் கட்டு |
| தாள் | : | வெள்ளைத்தாள் |
| வெளியீடு | : | சிந்தாமணிச் செல்வ வெளியீடு |
| ஒளி அச்சு | : | ஆதவன் பிரிண்டர்ஸ், மதுரை. |
| அச்சிட்டோர் | : | கணபதி எண்டர்பிரைசஸ், சென்னை-5 |

**MEENAKSHI PUTHAKA NILAYAM**
Mayura Complex, 48, Dhanappa Mudali Street, Madurai - 625 001.
☎ Off : 2345971 Resi : 2560517
E-Mail: meenakshiputhakam@hotmail.com

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

கற்பகம் பல்கலைக் கழகம்

**பன்னிரு திருமுறை ஆய்வு மையம்**

கற்பகம் அறக்கட்டளை

ஈச்சநாரி, கோவை – 641 021.

# முன்னுரை

## மறைகளை மறைத்தது முறையோ?

நமது தமிழ் மொழி மிகத் தொன்மையான மொழி. "கல்தோன்றி மண் தோன்றாக் காலத்துக்கு முன் தோன்றிய தமிழ்" என்று அதன் தொன்மையை வியந்து பாராட்டுகிறோம். அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கையும் தரவல்ல உயர்ந்த மொழி. செம்மொழி. எல்லா உலகங்களையும் படைத்து, காத்து 84 லட்சம் யோனி பேதங்களுக்கும் அருள்பாலித்து வரும் திரிபுரம் எரித்த விரிசடைக்கடவுளும், அவர்தம் குமாரர் முருக வேளும், அகத்தியர், தொல்காப்பியர், நக்கீரர் என்ற எண்ணற்ற புலமைச்சான்றோர்களும், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், நம்பியாரூரர் என்ற திருமுறை அருளாளர்களும் கட்டிக்காத்த தமிழில் "கிரியைக்கான மந்திரங்கள் இல்லை. எனவே கிரியைகளின் போது தமிழைப் பயன்படுத்தக்கூடாது" என்ற ஒரு நிலை இப்போது உருவாகியுள்ளது. இப்போது தமிழர்களாகிய நாம் செய்ய வேண்டியது என்ன? உண்மையிலேயே தமிழ்க்கிரியை நூல் இல்லையா? நூலோ, மந்திரமோ நமக்கு இல்லாதபோது நாம் அந்தக் கிரியையைச் செய்ய வேண்டுமா?

வேதம், வேதம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்களே, எது வேதம்? உருவ வழிபாட்டை வேதங்கள் ஏற்பதில்லை – அது எழுதாக்கிளவி – அதில் சிறுதெய்வ வழிபாடுதான் மிக அதிகமாக உள்ளது என்று சொல்கிறார்கள். **இந்திரன், வர்ணன், வாயு, அக்கினி** என்ற பணித் தெய்வங்களைத்தான் அதிகமாகப் பேசுகிறார்களேயன்றி சிவ வழிபாட்டுக்கு என்ன முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது? தோடுடைய செவியன்,

விடையேறி, தூவெண்மதிசூடி என்றெல்லாம் நாம் வர்ணித்து நாம் வணங்கும் நம் இறைவன் அப்படிப்பட்ட **வேதங்களையா அருளியிருப்பான்?** நிச்சயமாக இல்லை. அப்படியென்றால் இடையில் யாரோ அருளி அதை ஆண்டவன் செய்தது என்று சொல்கிறார்களா? ஆனால் மறைகள் உண்டு என்று நம் திருமுறை அருளாளர்கள் அருளியுள்ளார்கள். உதாரணமாகத் திருஞானசம்பந்தர் மதுரை ஆலவாய் அண்ணலைப் போற்றிப் பரவும் பதிகத்தில்

மங்கையர்க்கரசி வளவர்கோன் பாவை வரி வளைக்கை மடமானி
பங்கயச்செல்வி பாண்டிமாதேவி பணி செய்து நாடொறும் பரவப்
பொங்கழலுருவன் பூத நாயகன் நால்வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற்கண்ணிதன்னொடும் அமர்ந்த ஆலவாய் ஆவதும் இதுவே

என்றும்

"காதலாகிக் கசிந்து, கண்ணீர் மல்கி
ஓதுவார்தம்மை நன்னெறிக்குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன்நாமம் நமச்சிவாயவே"

என்றும் மூன்றாம் திருமுறையில் போற்றிப் பரவுகின்றார். எனவே நான்கு வேதங்கள் உண்டு. அவை ரிக், யஜுர், சாமம், அதர்வணமா? இல்லை அறம், பொருள், இன்பம், வீடா? அல்லது இவையெல்லாமன்றிப் பிறிதொன்றா?

"சுழிந்த கங்கை தோய்ந்த திங்கட் டொல்லரா நல்லிதழி
சழிந்த சென்னிச்சைவ வேடந்தான் நினைத்தைம்புலனும்
அழிந்த சிந்தை அந்தணாளர்க்கறம் பொருளின்பம் வீடு
மொழிந்த வாயன் முக்கணாதி மேயது முதுகுன்றே"

திருஞானசம்பந்தர்

இறைவர் தாம் அருளிய வேதங்களை ஏன் மறைத்து வைத்துள்ளார்? அவரிடம் இறைஞ்சிப் பெற வேண்டியது தமிழரின் கடமையல்லவா?

ஆழ்ந்து நோக்கும் போது, திருமுறை அருளாளர்கள் மறைகளையும், வேதங்களையும் பற்றிப் பல இடங்களில் கூறுவதால் அவை உண்டு. அவை இறைவனால் அருளப்பட்டவை என்பது நிச்சயம். ஆனால் அவை இன்று நமது வேத விற்பன்னர்களால் கூறப்படும் வேதங்கள் அன்றி. மற்றோர் தெய்வந்தனைக் கனவிலும் தீண்ட வேண்டாம் என்று நமக்குச் சொன்ன அருளாளர்கள் சிவ வழிபாடின்றி, இந்திரன், அக்கினி, வருணன், வாயு போன்ற பணிவிடைத் தேவர்களுக்கு வழிபாடு செய்யும் வேத நூல்களை ஏற்றுக் கொள்வார்களா? ஒருக்காலும் இல்லை.

"பையவே சென்று பாண்டியற்காகவே" என்ற திருஞானசம்பந்தரின் தெய்வ வாக்கு தீயை விரட்டவில்லையா? பஞ்ச பூதங்களையே ஒடுக்கும் மந்திர ஆற்றல் தமிழுக்குத்தான் உண்டு. உலகில் வேறு எந்த மொழிக்கும் இல்லை. இதைச் சாதாரண மனிதர்களாகிய நாம் ஆய்ந்து நுட்பங்களைக் காணமுடியாது. கண்டாலும் இன்று எல்லாத்துறைகளில் உள்ளோரும் ஏற்றிப் போற்றும் அறிவுள்ள பதிலையும் தர முடியாது. இதை இறைவன்தான் தெளிவாக்க வேண்டும். அவர் ஒருவரால் தான் முடியும் என்று திருவிளையாடற் புராணத்தில் பழியஞ்சின படலத்தில் வரும் ஒரு பாடல் செப்புகிறது.

"என்னா முன்னித் தென்னவன் இன்னம் இது முன்னூல்
தன்னால் ஆயத்தக்கது என்றான் தகவில்தன்
அன்னார் அந்நூல் ஆய்ந்து இது நூலால் அமையாதால்
மன்னா தெய்வத்தாலே தேறும் வழியென்றார்" என்றபடி கிரியை நூலையும், நால் வேத நூலையும் அந்த சிவபரம் பொருள்தான் சுட்டிக்காட்ட வேண்டும்.

மாப்பேரூழிக் காலத்துச் சங்க நூல்களெல்லாம் மறைந்த காலத்துப் பின் வந்த பாண்டிய மன்னர்களில் ஒருவர் தமிழின் சிறப்பான அகத்துறைக்கு நூல் இல்லையென வருந்தி சோமசுந்தரக்கடவுளை வேண்ட இறைவன் "களவியல்" எனப்படும் "இறையனார் அகப்பொருள்" என்ற அற்புத நூலைத்தந்ததாக வரலாறு உள்ளது. நூலை மட்டும் கொடுத்தால் நமக்குப் புரியாது என்று நக்கீரர் முதலான 49 சங்கப்புலவர்கள் மூலம் உரையையும் தந்து, அவற்றுள் சிறந்த உரையை உருத்திர சன்மன் மூலம்

நமக்குத் தந்த பேரருளாளன், அப்பேர்ப்பட்ட இறைவனிடம் கிரியை நூலையும், மூல வேத நூலையும் கேட்டுப் பெற வேண்டாமா? அதற்காக தினந்தோறும் நாம் செய்யும் சிவபூசையில் வேண்டுதல் விண்ணப்பத்தை வைக்க வேண்டாமா?

விண்ணப்பத்தை வெறுமனே வைத்தால் போதாது. எப்படி வைக்க வேண்டுமென்று நம் தெய்வச் சேக்கிழார் சொல்கிறார்.

**இட்ட ஏட்டினில் எழுதிய செந்தமிழ்ப் பதிகம்**
**மட்டுலாங்குழல் வனமுலை மலைமகள் பாகத்து**
**அட்டமூர்த்தியைப் பொருளென உடைமையால் அமர்ந்து**
**பட்ட தீயிடைப் பச்சையாய் விளங்கியதன்றே**

அட்டமூர்த்தியைப் பொருளெனக் கொண்டிருந்த காரணத்தால்தான் ஏடு பட்ட தீயிடைப் பசுமையாய் விளங்கியது.

அது போல நாமும் அவரையே பொருளாகக் கொண்டு தினமும் பூசை செய்து, பூசை முடிவில் விண்ணப்பிக்க வேண்டும். "வேண்டத்தக்கது அறிவோய் நீ! வேண்ட முழுதும் தருவோய் நீ!" நாமெல்லோரும் கண்டிப்பாகக் கேட்க வேண்டும். கேட்டால் பலன் உண்டு. அத்தகைய பூசனையை எல்லோரையும் செய்விக்கும் பொருட்டு ஒரு கூட்டு வழிபாட்டுக் கருத்தரங்கை நடத்த, திருவருள் கூட்டி வைத்துள்ளது. மூன்று ஆண்டுகளுக்கு முன் பழனிமலையில் முருகன் சிலை பொலிவு பெற நாம் ஒரு சிறப்பு வழிபாடு செய்து அச்செயல் எண்ணிய வண்ணம் முடிந்தது நாமறிவோம். எல்லோரும் தங்களுடைய தினசரி பூசையில் இந்த வேண்டுகோள் விண்ணப்பத்தையும் வைத்துப் பூசை செய்யுங்கள் என்று வேண்டுகிறோம்.

நன்றி, வணக்கம்.

அன்பன்,

**இரா.வசந்தகுமார்**

**குறிப்பு :** ஒரு கருத்தரங்க அழைப்பின் முன்னுரைப் பகுதியான இதனை, பொருத்தமுடைமை கருதி, இந்நூலின் முன்னுரையாகத் தந்துள்ளேன். பல்கலைக் கழக வேந்தர் இரா.வசந்தகுமாருக்கு நன்றியுடையேன்

**தமிழண்ணல்**

# தமிழ் நான்மறை விளக்கம்

வரலாற்றுக் காலத்துக்கு முந்தைய, மிகப்பழங்காலத்தே மக்கள் மரங்களை வழிபட்டனர். மரங்களில் தெய்வம் இருப்பதாக நம்பினர் என்பது தொல்பொருள் மானுடவியலார் ஆராய்ந்து கண்ட உண்மையாகும்.

ஆல், அரசு, வேம்பு அனைய மிகப் பெரிய மரங்கள் எல்லாம் தெய்வம் உறையும் புனிதமுடையவை எனக்கருதப்பட்டன. இவற்றுள் ஆலமரம் தமிழர்களால் மிகவும் போற்றி வணங்கப்பட்டது.

ஆலமரத்தின் தோற்றம் அவர்களைக் கவர்ந்தது. மிக உயர்ந்த நிலையில் சிவன் சடைமுடிகளுடன் தோன்றுவது போல் இருந்தது. மரம் அடர்த்தியாய், பரந்து, விரிந்து, உயர்ந்து விழுதுகளுடன் காட்சியளிப்பதைக் கண்டு அதனை வணங்கிப் பல்வேறு நிலைகளில் அதனைத் தெய்வ வடிவமாகக் கண்டனர்.

ஆலமரத்தின் அடியில் தெய்வத்திற்குரிய பூசனைகள் செய்து கும்பிட்டனர். காலப்போக்கில், அதை எளிதில் வழிபட ஒரு மரத்தறி நடப்பட்டது. அதைச் சுற்றி அணை கட்டப்பட்டது. அதனை ஒரு சதுரப்பட அமைந்த இடமாக்கினர், அதுவே வழிபடும் இடம். அச்சிற்றூர் மக்களுக்கான ஆட்சியிடமும் வழக்குத் தீர்க்கும் நீதிமன்றமும் கடவுளை வழிபடும் இடமும் என அது விளங்கியது. ஊர் நடுவே இருந்த அது பொதுயில், மன்றம், அம்பலம் என்றெல்லாம் அழைக்கப்பட்டது.

பிற்காலக் கோயில்களின் வளர்ச்சிக்கு இது வித்திட்டது எனலாம்.

ஆலமரத்தின் அடியில் மரத்தறியை வைத்து வழிபட்ட இதுவே, சிவவழிபாடாக மலர்ந்தது. இதற்கும் வடமொழிக்கும் எவ்விதத்தொடர்பும் இல்லை.

ஆலமர் செல்வனாம் சிவபெருமான் அருளியவையே தமிழ் நான்மறைகள், தமிழகச் சான்றோர்கள், துறவிகள், முனிவர்கள் சிவன் அருளிய நான்மறைகளை மிக விரிவாக எடுத்துரைத்தனர்.

வடமொழி வேதங்கள் வேறு. அவை தோன்றிய விதம் வேறு. அவற்றி னுட்பொருள் வேறு.

ஆனால் இவற்றிடையே வேறுபாடு அறியப்படாமல், வேதம், மறை என வருமிடங்களில் எல்லாம் வடமொழி வேதம் பற்றியனவே என உணரப்பட்டு, குழப்பமானது.

ஆரியர் வடமேற்குப் பகுதியில் நுழையும் முன்னரே, இங்கு சிவவழிபாடு இருந்தது. அது உருவ வழிபாடு.

ஆரியர்களுக்கு உருவ வழிபாடு இல்லை. கோயில் வழிபாடு பற்றி அவர்கள் எதுவும் அறியார்.

ஆரியர்கள் அக்கினியை வழிபட்டு வாழ்ந்தனர். அவர்களுக்கு இவ்வுலகில் தெய்வங்கள் என எதுவும் இல்லை. அவர்களது தெய்வங்கள் எல்லாம் மேல் உலகில் இருப்பதாக நம்பி, இங்கு அக்கினியை வளர்த்து, அத்தேவர்களை, தேவதைகளை வழிபட்டனர். அவர்களுக்கு அக்கினி ஒன்றே கண் கண்ட தெய்வம்.

அப்பர் பெருமான் 'கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே' என்று பாடுகிறார். இத்தறி கந்து எனவும் வழங்கப்பட்டது. மாத்தாள் கந்து, கருந்தாள் கந்து என்பன கடவுளுக்கு அடையாளமானது. (பிற்பாடு இதுவே இலிங்கம் எனப்பட்டது).

இதனை வெறுப்புடன் பார்த்த ஆரியர், அதன் தோற்றத்தை வைத்து 'ஆண்குறி' என்று கூறினர். அவர்கள் திராவிடப்பழங்குடி மக்களை 'சிசுன தேவனை' வழிபடுகின்றவர்கள் என்று எள்ளி நகையாடினர்.

இருக்கு வேதத்தில் சில இடங்களில் இவ்வாறு வருகிறது.

வசிட்டன் இந்திரனை நோக்கிக் கூறுகிறான்.

"இந்திரனே! அரக்கர்கள் எங்களைத் துன்புறுத்தாமல்
இருப்பார்களாக! சிசுன தேவர்கள் எங்கள்
வேள்வியைக் கலைக்காமலிருக்க, தலைவனான
இந்திரன், விஷம ஜந்துக்களைத் தடுக்க
ஊக்கமுள்ளவன் ஆவானாக (இருக்கு. 7-21-5)

சிசுனம் ஆண்குறி. சிசுன தேவர்கள் - ஆண் குறியை வழிபடுபவர்கள்; காமவெறி பிடித்தவர்கள். கிரிஃபித் இதனை Lewd என்று மொழி பெயர்க்கின்றார். அதற்குக் கீழ்த்தரமான காமுகர்கள் என்றே பொருள். இவ்வாறு இழிவுபடுத்தும் வேறொரு இடம் (இருக்கு. 10-99-3). (அலைகள் வெளியிட்டகம், சென்னை)

இங்ஙனம் சிவனை இழிவுபடுத்தும் வேதங்களைச் சிவன் அருளியிருப்பானா?

வடமொழி வேதங்களில் அதிதி, இந்திரன், வருணன், பிரசாதி, சரசுவதி, யமன், குபேரன் போலும் சுமார் 25 தேவதைகள் கூறப்பட்டுள்ளன.

தமிழர் கடவுள்களான சிவன், திருமால், முருகன், சக்தி, போல்வார் இடம் பெறவில்லை.

வடமொழி வேதங்கள் வேள்வி செய்வது ஒன்றையே கடவுள் வழிபாடாகக் கூறுகின்றன.

அக்கினி வழிபாட்டில் விலங்கினங்கள் பலியிடப்படுகின்றன. மக்களுக்குரிய உணவு முதலியனவும் நெருப்பில் போடப்படுகின்றன. நரபலி என்று மனிதர்களைக் காவு கொடுக்கும் யக்ஞங்களும் நடந்தன.

சோமன் என்பது ஒரு செடியின் சாறு. அது ஒரு போதை தரும்

பானம், சாராயம் போன்றது. அதனை அருந்தியதோடு, அதனைக் தெய்வம் என்றே கூறி, வழிபட்டுப் போற்றிப் பாடினர்.

இவ்வேள்விகளால் மக்கள் விரும்பும் எல்லாவற்றையும் பெறலாம் என நம்பச் செய்தனர்.

தமிழர் வழிபாட்டு நெறி இவை அனைத்தையும் ஏற்காது, பக்தி நெறி ஒன்றையே போற்றும்.

வைதிக அன்பர்கள் வடமொழி வேதங்கள் சிவபெருமானால் ஓதப்பட்டன என்று கூறுவது முற்றிலும் தவறு என்பது இதனால் விளங்கும்.

தமிழில் 'மறைகள்' என்பதே பெரு வழக்கு.

தொல்காப்பியரும் திருவள்ளுவரும் மறைகள் என்றே ஆள்கின்றனர். தொல்காப்பியத்தில்

'நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம்' என்ப

என வருவது காணலாம். சிவனருளியதையே முனிவர்களும் தெய்வநிலைச் சான்றோர்களும் உலக மக்களுக்கு எடுத்துரைத்தனர். இதனை மாற்றி ஆலமர் செல்வனாம் சிவன், பிரமனின் புதல்வர்கள் சனகாதி முனிவர் நால்வருக்குச் சொன்னதாகப் புராணக் கதை கட்டினர்.

வடவர்க்கு முற்படத் தமிழர்க்கு நான்கு மறைகளும் ஆறு அங்கங்களும் இருந்தன. வடமொழியில் வேதத்திலோ, கீதையிலோ, வேதம் சார்ந்த பிராம்மணங்களிலோ, ஆலமர நிழலில் அமர்ந்த சிவன் பற்றி எவ்விதக்குறிப்பும் இல்லை. மாறாக அவர்கள் செய்த புராணக் கதைகள் தமிழரை ஏமாற்றி விட்டன.

ஆலமர் செல்வனாம் சிவனே கோயிற் கருவறையின் உள்ளே தலைமைக் கடவுளாக இருக்க வேண்டும். அதை மாற்றி, கருவறை,

வெளிச்சுற்றில் கல்லால மரத்தின் கீழ் வியாழன் என தேவர்களின் குருவாக அமர்த்தி விட்டனர். கோள்களில் ஒன்றான வியாழன் என, தமிழரது பரம்பொருளை நம்ப வைத்தனர். அவ்விறைவன் மறைகளை மொழிந்தவன் என்பதால், குரு என எளிதாகக் கதை கட்டினர்.

கண் கண்ட உண்மையைக் கதை கட்டி ஏமாற்ற முயன்றதைச் சமயச் சான்றோர்கள் மறுத்துரைக்காதது விந்தையே.

ஆலமர் செல்வனைக் கோயில்களில் பிரகாரத் தெய்வம் ஆக்காது, சிவனே என அதற்கேற்ப வைத்து வெளிப்படுத்தினால், அவன் அருளிய தமிழ் மறைகள் பற்றிய உண்மைகள் வெளிப்படும் என எண்ணினர் போலும்.

தமிழ் நூல்களிற் காணப்படும் சான்றுகள் பலவற்றைக் கொண்டு நோக்கும் பொழுது ஆலமர் செல்வன் சிவனே என்பது உறுதிப்படுகிறது. வடமொழியில் சிறுகுறிப்பும் காணாத சிவன் அருளியன தமிழ் மறைகளே என்பதும் உறுதிப்படுகிறது.

சிவநெறியும் முருகன் வழிபாடும் ஒன்றுடன் ஒன்று இணைந்தவை. இவை தமிழரின் கடவுட் கொள்கையின் ஆணிவேர்கள். முருகன் குறிஞ்சி நிலக்கடவுள். அதன் வளர்ச்சியே சிவவழிபாடானது.

ஆலமரத்தைச் சிவனுக்கு இணையாகக் கருதி வணங்கியது போலவே, குன்றுகளும் மலைகளும் சூழ்ந்த நிலத்துக் கடவுளையும் சிவன் எனக் கருதி வழிபட்டனர்.

ஒரு குன்றின் எதிரே நின்று பார்த்தால் அதுவே சிவவடிவமாகும் தோற்றத்தைக் காட்டும்.

குன்றமே சிவன். அதன் உச்சியில் பிறைமதி இருப்பது, அதனை இறைவன் தலைமீது சூடியிருப்பது போன்றுளது. அருவி பாய்வது, சிவன் கங்கையைத் தலை மீது கொண்டு விளங்குவது போன்றுளது. மலை முழுதும் சுற்றி வளைத்துத் திரியும் மலைப் பாம்புகள், சிவன் அவற்றை

அணிந்திருப்பதை நினைவூட்டுவன. மலை அடிவாரத்தில் பச்சைப்பசேர் என விளங்கும் காடுகள், பச்சை மா மலை போல் மேனி மாயோனை- திருமாலைக் காட்டுகின்றன.

எவ்வாறு தமிழர்களின் மொழியாம் தமிழ் இயற்கையிலிருந்து தோன்றி வளர்ந்ததாக விளங்குகிறதோ, அது போலவே தமிழரது வழிபாடுகளும் இயற்கையிலிருந்து தோன்றி வளர்ந்தனவாக விளங்கு கின்றன.

ஆலமர் செல்வன் பற்றிய இலக்கியச் சான்றுகள் மிகப்பலவாகும்.

திருமுருகாற்றுப் படையில், 'ஆல் கெழு கடவுட் புதல்வ' என்று (256) நக்கீரர் முருகனைப் பாடுகிறார். இதே கருத்து, பழம் பாடல்களில் நிரம்ப வருவது குறிப்பிடற்பாலது. இங்கு கடவுள் என்பது சிவனைக் குறிக்கும்.

அகத்திணைத் தலைவியர் தங்கள் மகனை முருகனுக்கு ஒப்பிட்டுக் கூறி மகிழ்கின்றனர். கலித்தொகையில் இது பெரிதும் இடம் பெறுகிறது.

'ஆலமர் செல்வன் அணிசால் பெருவிறல்
போல வரும் என் உயிர்'. (கலி.81)

ஆலமர் செல்வன் சிவன். அவனது அழகு மிக்க மகனாம் 'முருகனைப் போல, என் உயிரனைய மகன் வருகின்றான்' என மகிழ்கிறாள், ஒரு தாய் (பெரு விறல் - மிக்க வீரச் சிறப்புடைய முருகன்).

முருகனுக்கு விழா எடுப்பது பற்றி வருமிடம் ஒன்று:

'ஆலமர் செல்வன் அணிசால் மகன் விழாக் கால்கோள்' (கலி.83)
ஆலமர் செல்வன் புதல்வன் (சிலம்பு, குன்ற)
ஆலமர் செல்வன் மகன் (மணி.3-144)
நான்மறை முதுநூல் முக்கட் செல்வன் (அகம்.181)

இவை அனைத்தும் ஆலமர் கடவுளாம் சிவனையும் அவனது மகன் முருகனையும் குறிப்பது காண்கிறோம்.

## ஆலமர் செல்வன் அருளிய தமிழ் மறைகள்

பல பாடல்களில் இவ் ஆலமர் செல்வனாம் சிவனருளிய திருமறைகள் பற்றி வருகிறது. வடமொழி வேதங்களின் தோற்றம் பற்றிய கதை வேறு. மேலுலகிலுள்ள கடவுளர்களும் தேவதைகளும் அருளிய அவற்றை, ரிஷிகள் தம் தவவலிமையால் உணர்ந்து ஓதியவை அவை என்றே கூறப்படுகிறது. ஆரியர் இங்கு புகுந்த போது, ஏற்பட்ட மோதல்களின் புலம்பலாக வடமொழி வேதங்கள் உள்ளன. வேதங்களுக்குப் பிற்பட்ட உபநிடதங்கள் போல்வனவே சிந்தனைக்குரியவை. வடவர்கள் வேதம் கூறுவதாகச் சொல்வன எல்லாம் பிற்பட்டவையே.

தமிழர்களுடன் தொடர்பு கொண்ட பின்பும் அவர்கள் பாடிய எந்த வடமொழி நூலிலும் ஆலமர் செல்வன் பற்றிய குறிப்பில்லை. தமிழிலோ சங்கப்பாடல்கள் பாடப்பெற்ற காலந்தொட்டே இவ்வரலாறு வருகிறது.

ஆரூரர், '**மறை நான்கும் கல்லால் நிழற்கீழ்ப்பன்னிய எங்கள் பிரான்**' என்று திருப்பழமண்ணிப் படிக்கரைப் பதிகத்தில் பாடுகிறார்.

மேலும் அவர் பாடுவன காண்க :

'அன்று ஆலின் நிழற்கீழ் 'அறம்' நால்வர்க்கு அருள்புரிந்து' (திருக்கடவூர்)

தமிழ் மறைகள் அறம், பொருள், இன்பம் வீடு என்ற நான்கு உறுதிப் பொருள்களை விளக்கின என்று சம்பந்தர் பாடுகிறார். 'அந்தணாளர்க்கு அறம் பொருள் இன்பம் வீடு மொழிந்த வாயான்' என்பது அவர் வாக்கு. மாணிக்கவாசகரும் இதைக் குறிப்பிட்டுள்ளார்.

அருந்தவருக்கு ஆலின்கீழ் அறம் முதலா நான்கனையும்
இருந்தவருக்கு அருளுமது எனக்கறிய இயம்பேடீ
அருந்தவருக்கு அறம் முதலா நான்கும் அன்றருளிச் செய்திலனேல்
இருந்தவருக்கு உலகியற்கை தெரியாகாண் சாழலோ

என்பதும் காண்கின்றோம்.

**கோதில் மாதவர் குழுவுடன் கேட்பக்**
**கோல ஆல் நிழற்கீழ் அறம் பகர**
**வேதம் செய்தவர் எய்திய இன்பம்**
**யானும் கேட்டு நின் இணையடி அடைந்தேன்**
**நீதி வேதியர் நிறைபுகழ் உலகில்**
**நிலவு தென்திரு நின்றி யூரனே (திருநின்றியூர்)**

இப்பாடலில் வரும் சொற்கள் ஆராயற்பாலன. நால்வர் மட்டுமன்றி, மாதவ முனிவர்களின் குழுவினரும் கேட்டனராம். 'நீதி வேதியரும்' (நல்லவர்களாம் சிவவேதியர்) கேட்டு மகிழ்ந்தனராம். இங்கும் மறைகள் 'அறம்' என்ற சொல்லால் குறிக்கப்படுகின்றன.

அருந்தவ மாமுனிவர்க்கு அருளாகி யொர் ஆலதன்கீழ்
இருந்து அறமே புரிதற்கு இயல்பாகியது என்னை கொலாம்?
(திருநாகேச்சுரம்)

திருநாவுக்கரசர், 'ஆலின் கீழிருந்து ஆரணம் ஓதி' என்று பதிவு செய்கின்றார். (ஆரணம் - மறை) மேலும் அவரே, 'விரித்தானை நால்வர்க்கு வெவ்வேறு வேதங்கள், புரித்தானைப் பதம் சந்திப் பொருளுருவாம் புண்ணியனை' (திருக்கச்சியேகம்பம்)

என்று தெளிவாகப் பாடுகிறார். வெவ்வேறு வேதங்கள் என்பது கருதுதற்குரியது.

திருஞான சம்பந்தரும் இதனைப் பாடுவது காண்க :

**"மாலடைந்த நால்வர் கேட்க நல்கிய நல்லறத்தை**
**ஆலடைந்த நீழல் மேவி அருமறை சொன்னது என்னே"**
**(திருச்சேய்ஞலூர்)**

**அறம் கிளரும் நால்வேதம் ஆலின் கீழ்**
**இருந்தருளி (திருமுதுகுன்றம்)**

வேதம், மறை என்பன இவ்வாறு ஒன்றுடன் ஒன்று மாறியும் பாடப்பட்டுள்ளன.

சேக்கிழார் சுந்தரர் வரலாற்றில் 'முந்தை மறை ஆயிரம் மொழிந்த திருவாயான்' என்றும் 'தூமறை பாடும் வாயான்' என்றும் குறிப்பதும் காண்க.

மாணிக்கவாசகரும் இக்கருத்தையே மிகத் தெளிவாகப் பாடியுள்ளார்.

**நன்றாக நால்வர்க்கும் நான்மறையின் உட்பொருளை**
**அன்றாலின் கீழிருந்து அங்கு அறம் உரைத்தான் காணேடீ**
**அன்றாலின் கீழிருந்து அங்கு அறம் உரைத்தான் ஆயிடினும்**
**கொன்றான் காண் புரம்மூன்றும் கூட்டோடே சாழலோ.**

நமது அருளாளர்கள் மறை என்று மட்டும் கூறி அமையாது, 'அறம்' என்ற சொல்லால், குறிப்பது மிகுந்த சிந்தனைக்குரியது. திரும்பத் திரும்ப வருவதால் அது வடமொழி வேதத்தின் வேறுபட்ட தமிழ்மறை என்பது தெளிவு. புறநானூற்றில் 'ஒருவன் செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்லென அறம் பாடிற்றே' என வருகிறது. இது திருக்குறளை 'அறம்' என்று குறிக்கின்றது. இவை சிந்தித்தற்குரியவை. அகநானூற்றில் 'நான்மறை முது நூல்' என்று அதன் பழைமை குறிக்கப்படுகிறது.

இதனையும் புராணக் கதை வழி திரித்து, மூல உண்மைகளை மறைக்க வேதியர்கள் தயங்கவில்லை. 'நால்வர்க்கு' என்பதற்கு, 'பிரம்மாவின் குமாரர்களாகிய சனகாதி முனிவர் நால்வர்க்கு உரைத்ததாகக் கதை கட்டினர். முன்பு சுட்டியது போல, ஆலமர் செல்வனாம் சிவனை, தட்சிணாமூர்த்தி ஆக்கி, குரு என்பதால் இவர் தேவகுரு – வியாழ பகவான் என்று விளக்கி விரித்துவிட்டனர். நம்மவரும் அதனை ஏற்று, சிவன் கோயில் திருச்சுற்றில் தென்பக்கம் இடம் தந்து 'தென்முகக் கடவுள்' என அதை மொழியாக்கம் செய்து கொண்டு, வியாழக்கிழமை தோறும் தேவகுருவுக்கு வழிபாடு செய்கின்றனர்.

ஆலமர் செல்வன் அருளிய மறை என்பது 'அறம்' எனப்படும். வடமொழி வேதங்களை அவ்வாறு அழைப்பதில்லை.

தமிழ் ஆகமங்கள் அழிக்கப்பட்ட வரலாற்றை, செருமானிய அறிஞர் சேமரூசு, தமது சைவ சித்தாந்தம் எனச் செருமன் மொழியில் எழுதப்பட்ட நூலில் தெளிவுற விளக்குகின்றார். ஆங்கில ஆக்கத்தில் இந்நூல் முழுமையாய் வந்துளது.

மும்மொழி அறிஞர் மு.அருணாசலம் தமிழ் ஆகமங்கள் அழிக்கப்பட்டு, அவை சமஸ்கிருத மயமாக்கப்பட்டதைக் குறிப்பிட்டுள்ளார்.

இது போல் தமிழ் மறைகளும் இருந்து, அழிக்கப்பட்டன போலும் என்று தெளிவாகத் தெரிகிறது. வடமொழி நூல்களிற் காணாத, ஆலமர் செல்வன் வரலாறு, இதைத் தெளிவாக்குகிறது

வடமொழி வேதங்களுக்கும் தமிழில் அறம் என்ற திருமறைகளுக்கும் பெரும் மோதலும் விவாதமும் இருந்து, பின்னர் தமிழ் மறைகள் முற்றிலும் அழிக்கப்பட்டன என்று எண்ண இடமுளது.

புறநானூற்றில்,

**நன்றாய்ந்த நீள்நிமிர்சடை**
**முதுமுதல்வன் வாய்போகாது**
**ஒன்று புரிந்த ஈரிரண்டின்**
**ஆறுணர்ந்த ஒரு முதுநூல்**
**இகல் கண்டோர் மிகல்சாய்மார்**
**மெய்யன்ன பொய்யுணர்ந்து**
**பொய் ஓராது மெய் கொளீஇ.**

வேள்வி செய்ததாக வருகிறது. இது பூஞ்சாற்றூர் பார்ப்பான் கௌணியன் விண்ணந்தாயனை, ஆவூர் மூலங்கிழார் பாடியது. இப்பாடல் நீண்ட ஆராய்ச்சிக்குரியது. நன்கு கட்டிய நீண்ட சடைமுடியையுடைய சிவன், வாய்மொழியாகக் கூறாதது. அது தமிழ்மறை. அதன் வேறாக நால்வேத ஆறங்கமாக ஒரு முதுநூல் வடமொழியில் உளது. இதில் தமிழ் மறையே சிறப்பு, அதன் வழியே நடப்போம் என்று கூறியவர்களின் தருக்கை அடக்க

மெய் போலும் அவர் கூற்றுப் பொய்யென்று உணர்ந்தான். அதனால் அவர் தம் பொய்யைப் பொருட்படுத்தாது. வடமொழி வேதவழி வேள்வி நெறியை மெய் என ஏற்றுக் கொண்டு, அப்பார்ப்பான் 21 வேள்விகளையும் சிறிதும் குறைவின்றிச் செய்து முடித்தானாம்.

தமிழிலும் நான்கு மறைகளும் ஆறு அங்கங்களும் இருந்தன என்பதையே, ஆலமர் செல்வன் அறம் பகர்ந்த வரலாறு கூறுகிறது.

நம் ஆலமர் செல்வனை, வியாழன் என்ற ஒரு கோளுடன் இணைத்து, தாழ்த்திவிடாமல், நம் அனைவருக்கும் தமிழ் மறை அறம் உணர்த்திய முழு முதற் பரம் பொருளாம் சிவன் என்பதே முறையாகும்.

ஆலமர் இறைவன் அருளிய மறைகள் இப்போது கிடைக்கவில்லை. தமிழ் ஆகமங்களை அழித்தவர்கள் அதைத் தங்கள் தேவைக்கேற்ப வடமொழியில் எழுதி வைத்துக் கொண்டனர். செருமனியில் இருந்து வந்து 'சைவ சித்தாந்தம்' என்ற நூலை எழுதியவர், சோமருசு என்பார் இவ்வாறு தமிழ் ஆகமங்கள் அழிக்கப்பட்டதையும் வடமொழியில் எழுதிக் கொள்ளப் பட்டதையும் தெளிவாகக் குறிப்பிடுகிறார்.

அதுபோல தமிழ் மறைகள் அழிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று எண்ணத் தோன்றுகிறது. அவை வடமொழிக்கு எதிரான கருத்துக் களாதலின, வடமொழியில் மொழி பெயர்க்காது விட்டு விட்டனராதல் வேண்டும்.

இந்நிலையில் வடமொழி வேதத்தையும் தமிழ்மறையையும் பிரித்தறிவது எவ்வாறு? தமிழிலும் நான்கு மறைகள் என்பதால் குழப்பம் நீடிக்கிறது.

வடமொழியில் இருக்கு மட்டுமே முதலில் வேதம் எனப்பட்டது. பிறகு யசூர், சாமம் சேர்க்கப்பட்டு, 'த்ரயீ' என அவை அழைக்கப்பட்டன.

சில காலம் கழித்தே 'அதர்வம்' சேர்க்கப்பட்டு, வேதம் நான்கெனப்பட்டது. தமிழில் நான்குமறைகள் பற்றியதே, முன்னைய வழக்கு. அதைப் பார்த்த பிறகே தங்கட்கும் நான்மறை எனக் கூறலாயினர்.

வேதத்தையும் மறையையும் பிரித்தறிவதற்கு ஒரு வழி உண்டு. சிவனைத் தேடுவன, தேடியும் காணாதன எனவரின் அவை வடமொழி வேதங்கள்; மறைகளின் உட்பொருள் சிவன், அவை அறம் பகர்வன, தூயன எனவரின் அவை தமிழ் மறைகள்.

மாணிக்கவாசகர், 'வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே' என்பார்.

தேவாரத்தில் இவ்விருவிதமாகவும் வருவதால், அவை தொகுத்து பகுத்தறியப்படவேண்டும். 'தூமறை பாடும் வாயார்', 'முந்தை மறை ஆயிரம் மொழிந்த திருவாயான்' என்பதும் தமிழ்மறைகளாகும் நான்மறை அறங்கள் ஓங்க' என்பதும் அதுவே.

தமிழர் சமயமும் சமஸ்கிருதம் என்ற நூலை யான் எழுத முற்பட்டபொழுது, தமிழ் நூல்களில் தமிழர்களின் நான்மறை பற்றிய குறிப்புத் தோன்றியது. நமது சமய குரவர்கள் தூயது நல்லது, அறம் பகர்வது என்று குறிக்கும் வேதங்கள் எல்லாம் தமிழ் மறைகளே என்பது விளங்கியது.

இதனால் வடமொழி வேதங்கள் பற்றிக் குறிப்பிட்டு விளக்க வேண்டியதாயிற்று. இவ்வாறு எண்ணிக் கொண்டிருந்த பொழுது கா.சுப்பிரமணியபிள்ளை இது பற்றி ஒரு நூலே எழுதியுள்ளார் என்று அறிய நேர்ந்தது. 'திருநான்மறை விளக்கம்' என்ற அந்நூல் எங்கு தேடியும் கிடைக்கவில்லை. கோவை, மணிவாசகர் அருட்பணி மன்றத் தலைவர், ந.இரா.சென்னியப்பனார், தமது முயற்சியால், அந்நூலை மறுபதிப்புச் செய்து வெளியிட்டுள்ளார். இதை அறிந்த, பரமக்குடி பா.குறிஞ்சிக்குமரன் அந்நூற்படி ஒன்றைப் பெற்று, எனக்கு அனுப்பினார். இவர்களுக்கு நன்றியுடையேன்.

பதிப்புரையில் ந.இரா.சென்னியப்பனார் குறிப்பிடும் ஞானசம்பந்தர் பாட்டு, தமிழ் நான் மறையை குறிப்பிடுகிறது.

**ஏரிசையும் வடவாலின் கீழிருந்தங்கு**
**ஈரிருவர்க்கு இரங்கி நின்று**

**நேரிய நான்மறைப் பொருளை உரைத்து ஒளிசேர**
**நெறியளித்தோன் நின்ற கோயில்.**

ஆலின் கீழ் நால்வருக்குப் பொருளுரைத்தது என்று தமிழ்மறை குறிப்பிடப்படுகிறது.

தேவர் குறளும் திருநான்மறை முடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை
திருவாசகமும் திருமூலர் சொல்லும்
ஒருவாசக மென்றுணர்.

ஔவையின் வாக்கில் தமிழ் நூல்களே கூறப்படுவதால், திருநான்மறை என்பது வடமொழி நூலைக் குறிக்கும் என்பது எவ்வாறு பொருந்தும் என்று கேள்வி எழுப்புகிறார்.

எனவே தமிழ் நான்மறைகள் என்பன இன்று கிடைக்கப் பெறாவிட்டாலும், அவை இருந்தன என்பது உறுதிப்படுகிறது.

பொதுவாக வேதம் என்பது, சிறந்த ஞானம் பெற்றவர்கள் கூறும் வாக்கு என்பதே தமிழ்நூல் விளக்கம். கா.சு.பிள்ளை அவர்கள் சமயம் தழுவி மிக நுட்பமாக இவற்றை விளக்குகின்றார். நான்கு வேதமும் ஆறு அங்கமும் என்பதால், அங்கம் ஆறும் கருவி நூல்கள் என அவர் விளக்குகின்றார். "மறைமொழிகள் மந்திரமாம் என்றமையாலே, அவற்றை ஒலிக்கும் முறையும் பொழுதும் உடனெழும் செயலும் அறிதற்குரிய கருவி நூல்கள் வேண்டுமென்பதும் தானே போதரும்" என்று விளக்கும் அவர் வடமொழியாளர் கூறும் ஆறு அங்கம் வேறு எனக் குறிப்பிடுகிறார். இரா.வசந்தகுமார் அவர்கள், கிரியை நூலையும் கேட்டுப் பெற வேண்டும் என்பது இந்த ஆறு அங்கம் பற்றிய நூலாகலாம் எனத் தோன்றுகிறது. நால்வர் கேட்ப என்றும் சிவன் நால்வர்க்கு மறைகளை அருளினன் எனவும் பல இடங்களில் வருகிறது. இது பற்றிப் பிள்ளை அவர்கள் "நால்வர் நால்வர் என்று பலமுறை தேவார முதல்வர்கள் ஆலின் கீழ் முனிவரைக் கூறினரேயன்றி அந்நால்வர் திருப்பெயரை யாண்டும் கூறிற்றிலர்" என்பது

உணர்க என்று கூறுகிறார். ஆனால் வடவர் பிரமனின் புத்திரர்களாகிய சனகாதி முனிவர்கள் நால்வரே அவர்கள் என்று புராணம் எழுதினர், பிள்ளைவர்கள், "புராணங்களுள் அவர்கள் பெயர் ஒருவாறு குறிக்கப்படுகின்றன. அவற்றை நாம் பாராட்ட வேண்டுவதில்லை" என நயமாக மறுக்கின்றார். சங்க நூல்களில் நான்மறை முதல்வர் என வருமிடங்களை விளக்கி, அன்றே வடமொழி நூற் கருத்து தமிழிற் கலந்து குழப்பமா்னதைத் தெளிவுபடுத்துகிறார். வடமொழி வேதக்கருத்துக்களைத் தமிழ் நூல்களில் கலந்தனர். பின்னர் அவற்றைத் தமிழர்தம் கருத்துக்களாகக் காட்டி இங்கே புகுத்தினர்.

சங்க கால மன்னர்கள் வேள்வி - ஆசையில் மூழ்கினர். அதனால் இறைச்சியும் போதை தரும் பானங்களும் மிகுதியாகக் கிடைத்ததால், எல்லோரும் வேள்வி செய்ய முயன்றனர். இதற்காக வடநூல் அந்தணரை அழைத்து வந்தனர். தமிழ்நான்மறை போல்வனவற்றைப் புறக்கணித்தனர். தமிழ் மறைகள் மறைவிற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

சமைய மெய்ஞ்ஞானமுடைய கா.சு.பிள்ளையவர்கள். இவ்விவாதப் பொருள் பற்றி தமிழ் நூல்கள் அனைத்திலும் மேற்கோள் காட்டி எழுதுவன நுட்பமானவை. அவரது, 'திருநான்மறை விளக்கம்' ஓர் அரிய நூல் என்பது, அதனைப் படிப்பார் அனைவரும் உணர்வதாகும்.

"மரநிழலின் கண்ணே வடிவ வழிபாடு செய்தல் தமிழர் வழக்கமென்பது தென்னாட்டுச் சிவதலங்கள் ஒவ்வொன்றிலும் சிவலிங்கம் உள்ள விடத்தே புண்ணிய மரமொன்று அதன் ஆதியிடமாகச் சுட்டப்படுகின்றது. திருக்கோயில் அமைவதற்கு முன்னரே அம்மரத்தின் அடியில் கடவுளை வழிபட்டார்கள் என்பது தெளிவு". என்று குறிப்பிடுகின்றார். பிரணவ மந்திரம் பற்றி விளக்குமிடத்து, 'ஓம்' என்பதை வடமொழிச் சொல் என்று கருதுகின்றனர். "ஓம் என்ற சொல்லிற்கு பாதுகாத்தல் என்ற பகுதிப் பொருள் தமிழிலே உள்ளதென்பது அதனடியாகப் பிறந்த 'ஓம்பு' என்பதன் பொருள் அஃதாதலின் வைத்து உணரப்படும். பிரணவத்திற்கு அப்பொருள் உண்மை, வடமொழிக் கூர்ம புராணத்துட் கூறப்பட்டுள்ளது" என்று கூறுவது நன்கு சிந்திக்கற்பாலது.

சமய இணக்கம் காரணமாக வேதம், மறை என்பன ஒருவாறு கலந்து கூறப்படும் கட்டாயம் ஏற்பட்டது. இவை இன்று நடுவு நிலையோடு தெளிவுபடுதற்கு நிரம்ப இடமுளது.

கா.சு.பிள்ளை அவர்கள்தான் முதன்முறையாகத் தமிழ் நான்மறை பற்றி விளக்கியுள்ளார். பிறிதோரிடத்தில் அவர் தம் சொற்பொழிவில் 'இந்து, 'இந்து மதம்' என்ற பெயர்களை, அவை தமிழர் சமயங்களைப் பெயர் கூட அறியவொட்டாமற் செய்ய நுழைக்கப்பட்டவை என்று கூறியுள்ளார். அவை தமிழர் சமயங்களாம் சிவநெறி (சைவம்), திருமால் நெறி (வைணவம்) எனும் பெயர்கள் தாமும் மேலெழுந்து வழங்காமலும் விளங்காமலும் செய்து விட்டன என்று வருந்திக் கூறியுள்ளார்.

சிறிய அளவினதாயினும் அரிய கருத்தை விளக்கும் 'திருநான்மறை விளக்கம்' என்ற நூலில், அவர் முடிப்புரையாகக் கூறுவன நிலைத்த உண்மைகளாகும்.

> "இது காறுங் கூறிப் போந்தவற்றின் தொகைப்
> பொருள் யாதெனின், கல்லால் நிழற்கீழ்ச்
> சிவபிரான் நால்வர்க்கும் அருளிய கலைஞானம்
> அந்நால்வரால், திருவள்ளுவ நூல் போன்றதாய்,
> அறம் பொருள் இன்பம் வீடென்னும்
> நான்கு உறுதிப் பொருளியல்பும் அவற்றை
> அறியும் மந்திரமுறையும் கூறும் பொது
> நான்மறையாக உருவெடுத்திலங்கிய
> தென்பதூஉம் அவற்றிற்குக் கருவியாய
> நூல் ஆண்டே எழுந்தனவென்பதூஉம்
> அவை வடமொழி வேதத்தின் வேறாய
> தமிழ்க்கணுள்ள சித்தர் நூல் போன்ற
> மந்திர நூல்களே வடமொழியில் ஆகமமாக
> பரிணமித்தன வென்பதூஉம் தமிழ்நூலும் அருள்
> நூலும் மறைவுற்ற பிற்காலத்தே வடமொழி
> வேதாகமங்கள் பிரமாண நூலாகத்தழுவற்பாலன
> வாயின வென்பதூஉம் தேவார திருவாசகமாகிய
> இன்று நிலவும் தமிழருமறை நூல்களுள்

தமக்கு முன்னூலாகப் பெரிதும் வழங்கும்
மறை பண்டைத் தமிழ்த் திருநான்
மறை யென்பதூஉம் அவற்றுள்,
சைவச் சார்பு காரணமாக வடமொழி
வேதமும் சிறுபான்மை குறிக்கப்பட்டதென்
பதூஉம் கூறி முடித்தனமென்க"
இதுவே இது தொடர்பான ஆய்வின் முடிபுமாகும்.

சிதம்பரம், வாகீச நகரிலுள்ள மாவட்ட நீதிபதி (ஓய்வு) கி.திருநாவுக்கரசு எழுதியுள்ள சில கருத்துக்களும் நிறைவாகச் சிந்திக்கத்தக்கன.

வைதீக அன்பர்கள் வேதங்கள் சிவபெருமானால் ஓதப்பட்டது என்று சமயகுரவர்களே தேவாரங்களில் பாடியுள்ளார்கள்; அதை மறுப்பவர்கள் மகாபாவிகள் என்றும் பாடியுள்ளார்கள்; மேலும் திருஞான சம்பந்தரே வேள்வி நடத்தத் தன் தகப்பனாருக்குச் சிவபெருமானை வேண்டிப் பொருள் பெற்றுத்தந்துள்ளாரே என்பது போன்ற வாதங்களை முன்வைக்கலாம். அவர்கள் வேதத்தின் ஒவ்வா நெறிகளைப் பற்றித் தெரிந்திருந்தும், வேதத்தைப் போற்றிப் பாடியது ஏன் என்பதற்குத் திரு.அ.ச.ஞானசம்பந்தம் அவர்கள்! 'பெரிய புராணம் - ஓர் ஆய்வு' என்ற நூலில் "மூவர் காலப் பின்னணி" "திருஞானசம்பந்தர் கூறும் சைவம்" என்ற இரு தலைப்புகளில் மிகவும் தெளிவாக விளக்கம் கூறியுள்ளார். (பக்.125 முதல் 167முடிய) அதில் கூறப்பட்டுள்ள கருத்து சுருக்கமாக அடியில் கொடுக்கப்படுகிறது. இக்கருத்து மேலும் ஆராயற்பாலது. ஏனெனில் வேதங்கள் தேடியும் காணாதவன் என்பது போன்றே அவை வருகின்றன.

'வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்தன்ற நுண்ணியனே' என்பது சிவபுராணம்.

சமயக் குரவர்கள் புத்தம் சமணம் போன்ற பிற சமயங்களை நேரிடையாகத் தாக்குதல் செய்தது போல், வேத வைதிகச் சமயத்தைத் தாக்க இயலாத சூழ்நிலைக்குக் காரணம் வேதவைதீகர்கள் வேத வேள்வி முதலியவற்றில் பெரும் நம்பிக்கை வைத்து அதனைக் கடைப்பிடித்தாலும் சிவபெருமானை ஓரளவு ஏற்றுக் கொண்டவர்கள் ஆவார்கள். இந்த

நிலையில் அவர்கள் கூறும் வேதம் முதலியவற்றை நேரிடையாகத் தாக்குதல் செய்தால் தங்களையும் வேத நெறிகளை எதிர்க்கும் சமணர், புத்தர்கள் என்று பெயரிட்டு ஒதுக்கி விடுவார்கள். அவர்கள் அவ்வாறு தங்களை ஒதுக்க இடந்தரக் கூடாது; மற்றும் பௌத்தர், சமணர்களால் அல்லலுற்ற ஒரு சமுதாயத்தைக் கை தூக்கி விட வரும் பெரியவரை வைதிகர்கள், பௌத்தர்கள், சமணர்கள் என்று பெயரிட்டு ஒதுக்கிவிட்டால், மக்கள் மத்தியில் தங்களால் ஒன்றும் செய்ய இயலாமல் போய்விடும் என்ற காரணத்தால், திருஞான சம்பந்தரும் இதர சைவ சமயக் குரவர்களும் வடமொழி வேதத்தையும் குறிப்பிட்டுச் சைவ சமயச் சீர்திருத்தக்கருத்துகளை மறைமுகமாகப் புகுத்தியுள்ளனர் என்பதுதான் உண்மை.

வடமொழி வேதத்தை ஏற்றுப்பாடினாலும், இவர்கள் எந்தக் கோயில்களிலும் வேத நெறியான யாகம் வளர்த்து வேதம் ஓதி வழிபாடு நடத்தியதே இல்லை. வேதத்திற்குப் புறம்பான சைவ சமய நெறிப்படியே சிவபெருமானுக்கு நேரில் சென்று அபிடேகம். ஆராதனை புரிந்தே வழிபாடு நிகழ்த்தியுள்ளார்கள். வேதநெறியில அதிதீவிரமாகப் பயிலப்பட்டு வந்த தீண்டாமை எனும் கொடிய வழக்கத்திற்கு எதிராக அந்தக் காலத்திலேயே, தீண்டத்தகாத குலத்தைச் சார்ந்தவரான யாழ்ப்பாணரையே. திருஞான சம்பந்தர் தாம் செல்லும் கோயில்களுக்குத் தன்னுடனே அழைத்துச் சென்று தாம் பாடிய தேவாரங்களுக்கு உடன் யாழ் வாசிக்கும் வழக்கத்தைப் புகுத்தியுள்ளார். மேலும் தம் தகப்பனாருக்குத் திருவாவடுதுறைக் கடவுளிடம் வேள்வி செய்யப் பொருள் பெற்றுத் தந்தது சிவ வேள்வி செய்வதற்கே அன்றி வேதவேள்விக்கு அல்ல என்று பெரியபுராணத்தில் அடியிற்கண்டவாறு விளக்கப்பட்டுள்ளது. "ஆறு சூழ்வேணி நாதனாரை முன்னதாகவே புரியும் நல்வேள்வி தீது நீங்க நீர் செய்யவும்" என்று கூறித்தான் பொருள் கொடுத்தார் என்று சேக்கிழார் பாடியுள்ளார். திருஞானசம்பந்தர் ஒவ்வொரு திருப்பதிகத்தின் இறுதியிலும் திருக்கடைக்காப்பு என்றும் பாடி பெரும்பாலான பாடல்களில் தாம் தமிழ்விரகன் ஞானசம்பந்தன் என்று முத்திரையிட்டுக் கொண்டு தமிழின் பெருமையையும், வலியுறுத்தியுள்ளார்; தாம் பாடிய தமிழ்ப் பதிகத்தை பாடுவோருக்கே இம்மை மறுமை இருவகைப் பலன்களும் கிடைக்கும் என்று ஆணையிட்டுப் பாடியதிலிருந்தே அவர் சமற்கிருத வேதநெறியை அறவே புறக்கணித்தவர் என்பதைத் தெளிவாக உணரலாம்.

திருநாவுக்கரசர் தாம் பாடிய தேவாரத்தில் வேதம் ஓதிலென் வேள்வி

ஆற்றிலென் என்றும் வேதத்தில் கூறியுள்ள இதர மூடநம்பிக்கைகளைக் கடைப்பிடித்து ஒழுகுவதினால் பயனில்லை என்ற கருத்தையும் கசப்பு மருந்தைத் தேனில் குழைத்துத்தருவதைப் போன்று. தாம் பாடிய பக்தி மிகுந்த தேவாரங்களின் ஊடே அங்குமிங்குமாகக் குழைத்துப் புகுத்திப் பாடியுள்ளார். மேலும் சமயக்குரவர்கள் தமது தேவாரங்களில் அகச் சமயங்களான வைணவர்களின் கடவுள் திருமால்; வேதவைதிகர்களின் கடவுளான பிர்மா இவ்விருவரும் சிவபெருமானுக்குத் தாழ்ந்த கடவுள் என்பதை நிரூபிக்க, அவர்கள் சிவபெருமான் முடி அடி தேடியும் காணப் பெறாது தோற்றுப் போன கதையைத் தாங்கள் பாடிய தேவாரங்களில் தொடர்ந்து பாடியுள்ளார்கள். இதிலிருந்து வைணவ, வேத வைதீக அகச் சமயங்களின் சிறுமையை உணர்த்தியுள்ளதைத் தெளியலாம்.

நேரிடையாக வேத வைதிகமதத்தை எதிர்த்துச் சைவ சமயக் குரவர்கள் தங்கள் சீர்த்திருத்தங்களைப் புகுத்த முயன்றிருப்பாராகில் அவர்கள் வெற்றி பெற்று இருக்க முடியாது. வள்ளலார் வேதவைதிகமதத்தை நேரடியாகச் சாடிச் சீர்திருத்தக் கருத்துக்களைப் புகுத்தியதாலேயே, வைதிகர்களின் கடுமையான எதிர்ப்பின் காரணமாக அவரின் நேர்மையான சமரச சுத்தசன்மார்க்க நெறி மக்களிடையே வெற்றி பெறத் தத்தளிக்கிறது என்பது ஆன்மிக மக்கள் அனைவருக்கும் தெரிந்த உண்மையாகும். சமயக் குரவர்கள் இதனாலேயே வேதநெறிமுறைகளை நேரடியாகக் குறை கூறாமல் போற்றுவது போல் நடித்துத் தங்கள் வழிபாட்டு நெறியில், வேத யாக நெறிகளைக் கடைப்பிடிக்காமல் ஒதுக்கிவிட்டுச் சைவசமய நெறிப்படியே வழிபாடுகள் நிகழ்த்த வேண்டுமென்பதைத் தங்கள் செயல்பாட்டினால் தமிழர்களுக்கு அறிவுறுத்திச் சென்றுள்ளார்கள். வேதநெறியாகிய யாக வழிபாட்டு நெறியில் வழிபாடு நிகழ்த்த வேண்டும் என்று ஒரு பாடலில் கூடப்பாடவில்லை; ஒரு இடத்திலும் யாகம் நடத்தி வழிபாடு நிகழ்த்தியதில்லை. அவர்கள் செம்மைத் தமிழில் பாடிய தேவாரங்களைக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி நேரிடையாகக் கடவுளை வணங்க வேண்டும்; செம்மை நெறியில் வாழ்க்கையை உய்வித்து நடக்க வேண்டும்; வேதத்தின் மெய்ப்பொருள் சிவாயநம எனும் சிவபெருமான் துதியே என்று வேதநெறிக்கு எதிரிடையான கருத்துக்களை மறைமுகமாகப் பக்தி எனும் அனுமானத்தில் குழைத்துத் தேனான தேவாரப் பாடல்கள் மக்கள் மனதில் பசுமரத்தாணி போல் பதிய வேண்டுவதற்காகவே பாடிச் சென்றுள்ளார்கள் என்பதுதான் உண்மை.

## தமிழ் நான்மறை எங்கே?

"பொங்கழல் உருவின் பூதநாயகன் நால் வேதமும் பொருள்களும் அருளி"

– திருஞான சம்பந்தர்

"ஆலின் கீழ் இருந்து ஆரனம் ஓதி" – திருநாவுக்கரசர்

"மறை நான்கும் கல்லால் நிழற்கீழ்ப் பன்னிய எங்கள் பிரான்" – சுந்தரர்

"அருந்தவருக்கு ஆலின்கீழ் அறம் முதலா நான்கனையும் இருந்தவருக்கு அருளுமது எனக்கறிய இயம்பேடி" – மாணிக்கவாசகர்

அருளாளர்கள் நால்வரும் சொன்ன தமிழ் நான்மறைகள் எங்கே?

தமிழ் ஆகமங்கள் அழிக்கப்பட்டன என்பர்

கரையான் தின்றதோ? கடல் கொண்டு போனதோ?

தமிழ் மறைகளைத் தேடும் சிந்தனையைத் தூண்டும் நூல் இது.

## சமய மறுமலர்ச்சிக்கு வித்திடும் நூல் இது

- இன்றைய அருச்சனை முறையை திருமுறைகளில் காணவில்லை.
- பூவும் நீரும் கொண்டு, இறையுருவைத் தொட்டு வணங்கும் முறையே மிகப்பல பாடல்களில் கூறப்படுகிறது.
- வடவர்க்குக் கோயில் உருவ வழிபாடு இல்லை. அக்கினி வழிபாடு ஒன்றே அவர்களுக்குரியது. அவை வேள்வி, ஹோமம் போல்வன, மலரிட்டு, விளக்கேற்றி, இசையாடி, படையலிட்டு வணங்குவதே தமிழர் வழக்கம்.
- மக்களுக்குப் பயன்படும் எதனையும் அக்கினியில் போடுவது தவறு. அபிடேகம் என்ற புனிதப் பெயரால் மக்களுக்குப் பயன்படும் பால், தயிர், தேன் ஆகியவற்றை அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்துவதும் தவறு. இறைவன் சந்தனம், அகில், பன்னீர் அனைய நறுமணப் பொருள்களையே விரும்புகிறான்.
- பரிகாரம், பிராயச்சித்தம் என்ற பெயரால், கடவுளுக்குக் காணிக்கைகள் கொடுத்து, தீங்கு செய்தும் தப்பிக்கலாம், நன்மைகளை அடையாளம் என்பது மூடநம்பிக்கை.

மீனாட்சி
புத்தக நிலையம்